**STELLA MARIS COLLEGE (AUTONOMOUS), CHENNAI 600 086**
**(For candidates admitted during the academic year 2019–2020 & thereafter)**

**SUBJECT CODE: 19TM/FC/SI43**

**B.A. / B.Sc./ B.S.W. DEGREE EXAMINATION, APRIL 2023**
**FOURTH SEMESTER**

| | | | |
|---|---|---|---|
| **COURSE** | **:** | **FOUNDATION – COURSE** | |
| **PAPER** | **:** | **SANGA ILAKKIYAM** | |
| **TIME** | **:** | **3 HOURS** | **MAX. MARKS: 100** |

**பகுதி-அ**

***(அ) அனைத்துக் கேள்விகளுக்கும் விடை தருக.*** *10 X 1=10*

1. நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்க்கப்பட்டது எது?
2. வெண்கோட்டு யானை சோனை படியம் நகர் எது?
3. தேனினும் பாலினும் இனிதென தலைவி கூறுவது எதனை?
4. புற்றிலிருந்து கிளம்பும் ஈசல் அழிவது போல எவருடைய வாழ்வு அழியும்?
5. பழமுதிர்ச்சோலை மலைக்கிழவோன் யார்?
6. ஞமலி என்பதன் பொருள் என்ன?
7. ஆடையை உடுத்தி, தலையில் எண்ணெய் தடவிச் சீவி , கையில் வேலைக் கொடுத்து, தாய் மகனை எங்கு அனுப்புகிறாள்?
8. கரும்பையும் கதிரோடு கூடிய நெல்லந்தாளையும் தழைகளையும் உணவாகத் தர அதனை உண்ணாமல் நுதலினைத் துடைத்தது எது?
9. “இரைதேர் மணிச்சிரல்” – எதனைக் குறிக்கிறது?
10. மந்தி – பொருள் தருக.

***(ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.*** *5 X 1=5*

1. பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி தொகுப்பித்த நூல் _________________
2. ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் _____________ .
3. குறுநில மன்னர்களின் வரலாற்றை அறிவிக்கும் ஆவணமாக அமைந்த நூல் ___________ ஆகும்.
4. கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய நூல் ______________ ஆகும்.
5. முல்லைப்பாட்டின் ஆசிரியர் _______________________ ஆவார்.

***(இ) பொருத்துக.*** *5 X 1=5*

| | | |
|---|---|---|
| 1. குறுந்தொகை | - | நக்கீரர் |
| 2. நற்றிணை | - | கூத்தராற்றுப்படை |
| 3. மலைபடுகடாம் | - | பூரிக்கோ |
| 4. திருமுருகாற்றுப்படை | - | 103 அடிகள் |
| 5. முல்லைப்பாட்டு | - | 275 புலவர்கள் |

**பகுதி-ஆ**

***(அ) எவையேனும் மூன்றனுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.*** *3 X 3 = 9*

1. தாமரைத் தண் தாது ஊதி, மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீம் தேன் போல ....

2. நீல மணிமிடற்று ஒருவன்’ போல
மன்னுக பெரும நீயே!

**..2**

*3.* பகல்கொள் விளக்கோடு இராநாள் அறியா
வெல்போர்ச் சோழர் ஆமூர் ...

*4.* இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே. . . .

*5.* செழுங்கன்று யாத்த சிறுதாள் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நல்நகர்;

***(ஆ) பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க. 4 X 9 = 36***

*1.* நகை நாணுதும் மற்றும் பெயல் தொடங்கினவே என்னும் நற்றிணை பாடல்களை விவரித்துரைக்க.
*2.* குறுந்தொகையில் அமைந்துள்ள அகப்பாடலின் கருத்துகளை புலப்படுத்துக.
*3.* ஐங்குறுநூறு வழி வெளிப்படும் அகவாழ்வியல் விழுமியங்களை தொகுத்துரைக்க.
*4.* பண்டைத்தமிழரின் வீரவாழ்வை விளக்கும் புறநானூற்றுப் பாடல்களில் ஔவையார் பாடல்களை மதிப்பிடுக.
*5.* அருவி காட்சியையும் இயற்கை வளத்தினையும் திருமுருகாற்றுப்படை வழி விளக்குக.
*6.* பெரும்பாணாற்றுப்படையில் அந்தணர் குடியிருப்பும் அங்கு பெறும் உணவும், திமிலர் உறையும் பட்டினம் குறித்து விளக்குக.

***(இ) இலக்கிய வரலாறு - ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 1 X 10 = 10***

*1.* புறநானூறு
*2.* குறுந்தொகை
*3.* மலைபடுகடாம்

**பகுதி-இ**

***(அ) நாடகத் திறனாய்வு - ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 1 X 15 = 15***

*1.* குடியின் தீமையினை உணர்த்தும் புதை குழி நாடகம் குறித்து ஆய்க.
*2.* திணிப்பு நாடகம் வெளிப்படுத்தும் குழந்தைகளின் எண்ணங்களை மதித்தல் குறித்து மதிப்பிடுக.
*3.* இரப்பர் நாடகத்தில் அமைந்த சுற்றுச் சூழல் சிந்தனைகளை ஆராய்க.

***(ஆ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 1 X 10 = 10***

*1.* நாளிதழில் வெளியான வேலை வாய்ப்பு விளம்பரத்தைக் கண்டு விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதுக.

அல்லது

2. அண்மையில் நீ சென்று வந்த புத்தகக் கண்காட்சி குறித்து உன் தோழிக்குக் கடிதம் வரைக.

அல்லது

*3.* சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து ஒரு விளம்பரம் தயாரித்து விளம்பர அறங்களை எடுத்துரைக்க.

********